**01.02.2024**

**அ.வ.எண். 123/2018**

**<u>பி.சா.1 பத்மநாபன் அவர்களின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தண்டலம் கிராமத்தை சேர்ந்தவர். வாதியை எனக்கு தெரியும். அவர் தண்டலம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். ஆனால் தற்போது அவர் அங்கு இல்லை. வாதியின் தகப்பனார் மற்றும் தாத்தா தண்டலம் கிராமத்தில்தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமாக நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 125 வாதியின் பட்டா நிலம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்கு வடக்கு பக்கம் சர்வே எண் 125 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 125 னை வாதி தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து 20 செண்ட் புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வசித்து வரும் கர்ணா என்பவரை எனக்கு தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக கர்ணாவுக்கும் எத்திராஜிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

3. தாவா சொத்து சம்பந்தமாக கர்ணாவுக்கு எதிராக வாதி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்304/1988 தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு 04.11.1993 அன்று வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)